டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 18.06.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 36 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 001 - Madurai | Online Edition

# நிலம் பாலைவனமாதல், வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்கிறது

## மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் தகவல்

புது தில்லி, ஜுன் 17

நிலம் பாலைவனமாதல், வறட்சி ஆகியவற்றை எதிர்கொள் வதற்கான உலகளாவிய தினம் ஆண்டுதோறும் ஜுன் 17 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

பாலைவனமாதல், நிலச்சீரழிவு, வறட்சி ஆகியவற்றுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் இந்த தினம் ஒரு உலகளாவிய தினமாகத் திகழ்கிறது.

இது தொடர்பாக புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பங்கேற்று உரையாற்றினார். கொள்கை, உறுதிப் பாடு, அறிவியல் ரீதியான புதுமைக் கண்டுபிடிப்பு, பொதுமக்கள் பங்கேற்பு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு, சுற்றுச்சூழல் மீட்பை நீடித்த வளர்ச்சிக்கான ஒரு பயன்மிக்க வழிவகையாக மாற்றும் என்பதை இந்தியாவின் அணுகுமுறை விளக்குவதாக கூறினார்.

பான் சேலஞ்ச் திட்டத்தின் கீழ், 2030-ம் ஆண்டிற்குள் 26 மில் லியன் ஹெக்டேர் நிலப்பரப்பை மீட்டெடுக்கும் இலக்கிற்கு எதிராக இந்தியா ஏற்கனவே 21.76 மில்லியன் ஹெக்டேர் நிலப் பரப்பை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

**அக்ரி டாக்டர் நாளிதழ் இன்று 14வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது ...**

எங்களுக்கு ஆதரவு அளித்து வரும் அரசு வேளாண் அதிகாரிகள், அலுவலர்கள், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், கல்லூரி பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பள்ளி கல்லூரி மாணவர்கள், சமூக வலைதள அட்மின்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- நிர்வாகி

அத்துடன் பாலைவனமாதலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக நீடித்த நில மேலாண்மையை நாடு தொடர்ந்து முன்னெடுப்பதாக அவர் கூறினார்.

2030-ம் ஆண்டிற்குள் 26 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பை மீட்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதமர் மோடி அறிவித்திருந்ததாக யாதவ் குறிப்பிட்டார். இது உலகின் மிகப்பெரிய நிலம் மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றாகும் என்று அவர் கூறினார்.

# நாட்டு இனங்கள் மற்றும் அதன் பராமரிப்புகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி




சேலம், ஜுன் 17

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையத்தில் நேற்று நாட்டு மாடு இனங்கள் மற்றும் அதன் பராமரிப்புகள் குறித்து விவசாயி களுக்கு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் முத்தாக் கவுண்டனூர் கால்நடை மருத்துவர் சேகர், மாடுகளின் ஆரோக்கியம், மருத்துவ முறைகள் தீவன மேலாண்மை நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நடைமுறைகள் மற்றும் மாடுகளின் நலன் சார்ந்த மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்து கூறினார். மேலும் சந்தியூர் வேளான் அறிவியல் நிலையத்தில் இருந்து பேராசிரியர் இளங்கவி (Agronomy) விளைநிலம் பாதுகாப்பு இயக்கம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் ஞான ஜோதி முருகன், விவசாய நில உடைமை அடையாள எண் மற்றும் விலை நிலம் பாதுகாப்பு இயக்கம் பற்றி எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் செல்லமுத்து, வேளாண்மை திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் ராஜ்குமார், சந்தோஷ் மற்றும் பிரியங்கா செய்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணைய பயிற்சி



அரியலூர், ஜூன் 17

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த பண்ணையம் குறித்த விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா பயிற்சிக்கு கிரீடு வேளாண் அறிவியல் மையத்திற்கு விவசாயிகள் 50 பேர் அழைத்து செல்லப்பட்டனர். இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ.) தமிழ்மணி கலந்துக் கொண்டு ஒருங்கிணைந்த பண்ணை யத்தின் முக்கியத்துவம் குறித்தும், விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத் துறை மற்றும் சகோதரதுறைகளின் திட்டங்களைப் பெற விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் என கூறினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன் கலந்து கொண்டு விவசாயி களிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், ஒருங்கிணைந்த பண்ணையம் நிர்வாகத்தை கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்துக் கூறினார். மேலும் பரண்மேல் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு குறித்தும் எடுத்துக் கூறினார். முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் வேளாண்மை துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், அட்மா திட்டங்கள் குறித்தும் எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் உசா மற்றும் தா.பழூர் வட்டார விவசாய பெருமக்கள் திரளாக கலந்துக் கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**முளைகட்டிய பச்சைப்பயிறு வெள்ளரிக் கூட்டு**

**தேவைப்படும் பொருள்கள்**

வெள்ளரிக்காய் ஒன்று

முளைவிட்ட பச்சைபயிறு 50 கிராம்

மிளகாய் சாறு ஒரு தேக்கரண்டி

பூண்டு சாறு அரை தேக்கரண்டி

சீரகப்பொடி ஒரு தேக்கரண்டி

கருவேப்பிலை பொடியாக நறுக்கியது இரண்டு தேக்கரண்டி

தேங்காய் துருவல் ஒரு கப்

எலுமிச்சை சாறு ஒரு தேக்கரண்டி

**செய்முறை**

வெள்ளரிக்காய் விதைகளை அகற்றி பொடி பொடியாக நறுக்கி அத்துடன் மீதமுள்ள எல்லாவற்றையும் போட்டு நன்றாக கிளறவும். சுவை மிகுதியாக தேவை எனில் சிறிது இந்து உப்பு சேர்க்கலாம்.

**பயன்கள்**

சூட்டை தணிக்கிறது, கண்ணிற்கு பாதுகாப்பு அளிக்கிறது. நல்ல உடல் வளர்ச்சிக்கு நல்ல உணவாக பயன்படுகிறது.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# குறுவை சாகுபடி நெற்பயிருக்கு விதைப்பரிசோதனை அவசியம்

திருச்சி, ஜூன் 17

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெல்,சோளம், கம்பு, மக்காசோளம், பயறுவகை பயிர்கள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்து பயிர்களான எள், கடலை அதிகமான பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பாசன நீர் தட்டுப்பாடு இல்லாத இடங்களில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பருவத்தில் அதிக விளைச்சலும் கிடைக்கின்றது.

குறுவை சாகுபடியில் அதிக மகசூல் பெற்றிட குறுவை பட்டத்திற்கான நெல் இரகங்களான ஏடீடி-36, ஏடீடி-37, ஏடீடி-43, ஏடீடி-45, ஏஎஸ்டி-16,ஏஎஸ்டி-18, கோ-51 மற்றும் டிபிஎஸ்-5, ஆகிய இரகங்களில் பகுதிக்கு ஏற்றவாறு இரகங்களை தேர்வு செய்து விதையின் தரம் அறிந்து விதைப்பது அவசியம்.

**கோ 51**

கோ 51 என்ற குறுகிய கால நெல் இரகம் 2013ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இரகம் இறவை சாகுபடியில் 105-110 நாட்களில் ஒரு எக்டருக்கு 6,623 கிலோ விளைச்சல் தரவல்லது. மேலும், மானாவாரி நெல் சாகுபடியில் 100-105 நாட்களில் விளைச்சல் தரவல்லது, இந்த இரகம் குலை நோய், புகையான் மற்றும் பச்சைத்தத்துப் பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. ஜூன் - ஜூலை அல்லது செப்டம்பர் - அக்டோபர் பருவத்தில் பயிரிட ஏற்றது.



**டீபிஎஸ் 5**

118 நாட்கள் வயதுடைய இந்த இரகம் 2014ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இரகம் ஒரு எக்டருக்கு சராசரியாக 6300 கிலோ விளைச்சல் தர வல்லது. நல்ல அரவைத்திறன் கொண்ட இந்த இரகத்தின் அரிசி குறுகிய தடிமனானது. தண்டுத் துளைப்பான், இலைசுருட்டுப்புழு மற்றும் புகையானுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**ஏஎஸ்டி 16**

இந்த இரகம் 115 நாட்கள் வயதுடையது. நடுத்தர உயரமும், சாயாத தன்மையும் உடையது. புகையான், இலையுறை அழுகல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம், பிலிப்பைன்ஸ் சூப்பர் நெல்லுக்கு இணையான குணங்களை கொண்ட இதனை தமிழக சூப்பர் நெல் என்று கூறலாம்.

**ஏஎஸ்டி 18**

ஏஎஸ்டி 18, 110 நாட்கள் வயதுடைய சாயாத தன்மையுடையது. குலைநோய், புகையான் மற்றும் வெள்ளைதத்துப் பூச்சிக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. எக்டருக்கு 6 டன் விளைச்சல் தரவல்லது.

எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் குறுவையில் அதிக மகசூலும் அதிக லாபமும் பெறவும், விதைக்கான இடுபொருள் செலவினைக் குறைக்கவும், தங்களிடம் உள்ள விதைகளை விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/– ஆய்வுக் கட்டணமாக செலுத்தி திருச்சிராப்பள்ளி புத்தூர் நால்ரோட்டில் உள்ள ஒருங்கிணைந்த விதைச்சான்று மற்றும் உயிர்மசான்று வளாகத்தின் கீழ்தளத்தில் செயல்பட்டுவரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து, விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறும் திருச்சிராப்பள்ளி விதைப்பரிசோதனை அலுவலக வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா, இரா.புவனேஸ்வரி மற்றும் விதைப்பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அந்தநல்லூர் கிராமத்தில் மண்வளம் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



திருச்சி, ஜூன் 17

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் மண் வளம் பாதுகாப்போம் இயக்கம் (கேத் பச்சாவோ அபியான்) என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி திருச்சி மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் ஜூன் 1, 2026 முதல் ஜூன் 30, 2026 வரை நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, அந்தநல்லூர் கிராமத்தில் மண் வளம் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி அந்தநல்லூர் வட்டார வேளாண் துறையுடன் இணைந்து நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி துவங்கி வைத்து மண்வளம் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மண்பரிசோதனை மற்றும் மண்ணின் வளத்திற்கு ஏற்ப உரமிடு தலின் முக்கியத்துவம் குறித்து இணை பேராசிரியர் முனைவர் சகிலா விளக்கினார். வேளாண்மை அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் ராதிகா பசுந்தாள் உரம் பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவரித்தார்.

இதில் ஏராளமான விவசாயிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண் கல்வி நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு வேளாண் பட்டையபடிப்பு மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பேரணியில் 'மண்வளம் காக்க இயற்கை வேளாண்மையை வளர்ப்போம்', 'இரசாயன உரம் குறைப்போம் – மண்ணையும் நாட்டையும் காப்போம்', 'மண்பரிசோதனை செய்வோம்', 'மண் புழு உரம் இடுவோம்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் மாரிமுத்து முனைவர் தனலட்சுமி மற்றும் முனைவர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். வம்பன் வேளாண் கல்வி நிறுவனத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் தியாகு, உதவி பயிற்றுநர்கள் முனைவர் ராதா கிருஷ்ணன் மற்றும் முனைவர் சுகன்யா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், அந்தநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கலந்து கொண்டார்.

# மக்காச்சோள பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி பயிற்சி!




சேலம், ஜூன் 17

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், காமக்காபாளையம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ், மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கி, குத்துவிளக்கேற்றி பயிற்சியைத் தொடக்கி வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது, 'தலைவாசல் வட்டார விவசாயிகள் ரசாயன உரங்களின் பயன்பாட்டைத் தவிர்த்து, இயற்கை வழி வேளாண்மைக்கு மாற வேண்டும். மண்ணின் வளத்தைப் பாதுகாத்து, சாகுபடி செலவைக் குறைப்பதன் மூலமே விவசாயிகள் தங்களது வருமானத்தை இரட்டிப்பாக்க முடியும்.' தொடர்ந்து, பயிற்சியாளர் பிரவீன் முறையான மண் மாதிரி சேகரிப்பு முறைகள் குறித்தும், அதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு நேரடி செயல் விளக்கம் அளித்தார். மற்றொரு பயிற்சியாளர் வரதராஜன், தரமான விதை தேர்வு மற்றும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நுண்ணீர் பாசன முறைகளின் முக்கியத்துவம் குறித்து விரிவுரையாற்றினார். இப்பயிற்சியில், உதவி வேளாண்மை அலுவலர் ரவிக்குமார் கலந்து கொண்டு, வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் மற்றும் நடப்பு மானிய விபரங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ் மற்றும் முத்துவேல் ஆகியோர் செய்திருந் தனர். இதில் காமக்காபாளையம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி களைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட முற்போக்கு விவசாயிகள் கலந்து கொண்டு தொழில்நுட்பங்களை அறிந்து பயன் பெற்றனர்.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்கள் வலுப்படுத்தும் முகாம்




மதுரை, ஜூன் 17

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு விராதனூர் கிராமத்தில் B.12 Organisation of field days and Kisan Gosthies to Strengthen R-E-F linkage IPM in Paddy. நெற்பயிரில் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்கள் விவசாயிகள் வலுப்படுத்தும் முகாம் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் மேம்பாடு பாரதப் பிரதமரின் கௌரவ நிதி உதவி விழிப்புணர்வு முகாம் மற்றும் விளைநிலம் காப்போம் - Khet Bachao Abhiyan – கேத் பச்சோ அபியான் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உரப்பயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் விளக்கம் அளித்தார். பாரத பிரதமரின் கௌரவ நிதி திட்டம் மண்வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது காலநிலை மாற்றத்தை எதிர் கொள்வது பசுந்தாள் உரப் பயன்பாடு குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். வேளாண் அறிவியல் நிலையம் மதுரை முனைவர் ப.அருள் அரசு, இணை பேராசிரியர் தோட்டக்கலை, மண்வளம் பாதுகாப்பு பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் மேம்பாடு செயல்பாடு முறைகள் மண்வளம் பாதுகாப்பு பயிர் சுழற்சி முறை பூச்சி நோய் மேலாண்மை ஆகியவை குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் அழகேசன், வேளாண்மை மானியத் திட்டங்கள் குறித்து விவரித்துக் கூறினார். விராதனூர் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்கள் விவசாயிகள் வலுப்படுத்தும் முகாமை தொழில்நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சிக்கு ஏற்பாடு களை செய்து வட்டார தொழில் நுட்ப மேலாளர் லதா நன்றியுரை வழங்கினார்.




# ஒரு கிராமம் - ஒரு பயிர் திட்டம் தெரியுமா?




கூடுதலாக மகசூல் பெறுவதை நோக்கமாக கொண்டு தமிழகத்திலுள்ள 15,280 வருவாய் கிராமங்களில் மண் மற்றும் தட்ப வெப்ப நிலைக்கேற்ப ஒரு குறிப்பிட்ட பயிரை (CROP) குறிப்பிட்ட வருவாய் கிராமத்தில் (VILLAGE) தேர்வு செய்து சாகுபடி செய்து உற்பத்தி திறனை மேம்படுத்திட உதவும் திட்டமாகும்.

**செயலாக்கம் எப்படி?**

ஒவ்வொரு வருவாய் கிராமத்தில் ஒரு பயிர் என்ற விகிதத்தில் 5 முதல் 10 ஏக்கர் பரப்பளவில் செயல் விளக்க திடல் (DEMENSTRATION PLOT) அமைத்து அதில் விதை முதல் விற்பனை வரையிலான அனைத்து தொழில்நுட்பங்களை புகுத்தி செயல் படுத்த வேண்டும். பூச்சி / நோய் மேலாண்மையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கையாளுவதுடன் சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுத்து அந்த கிராமத்திலே முன் மாதிரியாக இத்திடல் அமைக்க வேண்டும். அவ்வப்போது தொழில் நுட்ப அலுவலர்களின் வழிகாட்டிதலின் பேரில் சாகுபடிக்கான செலவு கணிசமாக குறைந்து கூடுதலான உற்பத்தி அடைய வேண்டும்.

**எந்த எந்த பயிர்களில் இந்த திடல்கள் அமைக்கலாம்?**

நெல், கேழ்வரகு, மக்காசோளம், துவரை, உளுந்து, தட்டை பயறு, எள், நிலக்கடலை, கரும்பு போன்ற பயிர்களில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**திடலால் ஏற்படும் நன்மைகள்?**

1) மத்திய மாநில அரசு திட்டங்களை விவசாயிகளுக்கு அவ்வப் போது தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதால் மற்ற விவசாயி களுக்கு எடுத்துக்காட்டாக இந்த திடல் அமையும்.

2) இதை மற்ற விவசாயிகள் பார்வையிட ஏதுவாக நிகழ்ச்சிகள் (வயல் தின விழா) போன்றவை நடத்துவதால் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவு வளரும்.

எனவே உங்களுடைய பகுதியில் உள்ள திடலை சென்று பாருங்க, மகசூலை அள்ளுங்கோ.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வாழையில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜூன் 17

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டம் மூலம் 17.06.26 அன்று பரவை கிராமத்தில் வாழையில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப் படுத்துதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. வாழையில் மதிப்புக் கூட்டல், விரைவில் கெட்டுப்போகக்கூடிய பயிர்களை, சிப்ஸ், மாவு மற்றும் சாக்லேட் போன்ற அதிக இலாபம் தரும் பொருட்களாக மாற்றுதல், திறமையான சந்தைப்படுத்துதலுக்கு தேவையான நுகர் வோரைக் கண்டறிதல், சரியான விற்பனை வழிகளைத் தேர்ந் தெடுத்தல் அவசியமாகும். மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக ஆன்லைனில் விற்பது, பல்பொருள் அங்காடிகளுக்கு மொத்தமாக விற்பது, அல்லது பிராந்திய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்றவை இப்பயிற்சியில் முக்கிய கருப்பொருளாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப் பட்டது. இப்பயிற்சிக்கு மதுரை, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அ.இராணி, கலந்து கொண்டு மத்திய அரசின் திட்டமான விளை நிலங்களை பாதுகாப்போம் இயக்கம், விவசாயிகளின் ஒருங்கிணைந்த தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி உதவி திட்டம், கோடை உழவு, களை மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை ஆய்வாளர் பாண்டியராஜா, கலந்து கொண்டு பெண்களுக்கு சுய தொழில் ஆரம்பித்தல், ஊரக இளைஞர்களை தொழில்முனைவோர் ஆக்குதல் மற்றும் மாவட்ட தொழில் மையத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப் பாளர் மீனாட்சிசுந்தரம், கலந்து கொண்டு நிறுவனத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் உதவிகள் குறித்தும், மண்புழு உர உற்பத்தி செய்வது குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தார்.

மேற்காணும் பயிற்சிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் மகாராஜன், விரைவில் கெட்டுப்போகும் புதிய வாழைப் பழங்களை விற்பதற்குப் பதிலாக, அவற்றை பல இலாபகரமான பொருட்களாகப் பதப்படுத்துவது மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான வாழைப்பழ சிப்ஸ், வாழைப்பழ மாவு, வாழைப்பழக்கூழ், வாழைப்பழ பானங்கள் மற்றும் வாழைப்பழத் தோல்களை கால்நடைத் தீவனமாகவோ அல்லது உடனடி கறிக் கலவைகளாகவோ மறுபயன்பாடு செய்தல். வாழைத்தண்டு நார்களைக் கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த காகிதம், மக்கும் தட்டுகள் அல்லது கைவினைப் பொருட்களை உருவாக்குதல், சந்தைப்படுத்துதல் உத்திகளான நேரடி நுகர்வோர் விற்பனை, பல்பொருள் அங்காடி மற்றும் சில்லரை விநியோகம், ஏற்றுமதி மற்றும் கூட்டுறவு சந்தைப் படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மதுரை மேற்கு, வேளாண் வணிக உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜு மற்றும் சண்முகசுந்தரபாண்டி ஆகியோர் கலந்து கொண்டு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும், ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் செயல்பாடு, சந்தைப்படுத்துதல் போன்றவை குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை ATMA திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர், எஸ்.கே. ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர் பாலமுருகன் மற்றும் பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர்கள் முரளிதரண் மற்றும் லியோ இன்பெண்ட் ஆகியோர் செய்திருந்தனர்.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# உள்ளூர் கால்நடை இனங்கள் பராமரிப்பு பயிற்சி



சேலம், ஜூன் 17

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், கீரைபாப்பம்பாடி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் உள்ளூர் கால்நடை இனங்கள் பராமரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமை தாங்கி விவசாயி களுக்கு மண் பரிசோதனை, மண் வள அட்டைகள், இயற்கை விவசாயம், உரங்களின் சமச்சீரான பயன்பாடு மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள், பசுந்தாள் உரம் இடுதல் மற்றும் விவசாய அடையாள எண் பற்றி வரிவாக எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்து கூறினார்.

கால்நடை உதவி மருத்துவர் ஜி.எம்.சண்முகப்பிரியா பயிற்சி–யாளராக கலந்து கொண்டு காங்கேயம், புலிக்குளம், உம்பளாச்சேரி, பர்கூர், ஆலம்பாடி போன்ற மாடு இனங்களும், கன்னி ஆடு, செம்மறி ஆடு மற்றும் தோடா எருமை போன்ற நாட்டு கால்நடை இனங்கள் வளர்ப்பு முறைகள், கால்நடை பண்ணை களுக்கான திறன் வாய்ந்த பண்ணை மேலாண்மை, கறவை மாடுகளின் மலட்டுத்தன்மை மேலாண்மை, நவீன இனப்பெருக்க முறைகள், கோடை கால பராமரிப்பு, கால்நடை விவசாயிகளின் வருமான பாதுகாப்பு, தீவன உற்பத்தி, பால் மற்றும் இறைச்சி மதிப்பு கூட்டுதல் மற்றும் கால்நடை வளர்ப்பில் சமீபத்திய முன்னேற்றம் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்து கூறினார். கலந்து கொண்ட 40 விவசாயி களுக்கு பயிற்சி ஊக்கதொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் உதவி விதை அலுவலர் கே,ஆர்.தங்கராசு, உதவி வேளாண்மை அலுவலர் எம்.தினேஷ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சி.சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி பயிற்சி



அரியலூர், ஜுன் 17

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல் படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் (அட்மா) விவசாயிகளுக்கான பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு மக்காச்சோளம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தலைப்பில் சுத்தமல்லி புளியங்குழி கிராமத்தில் நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் கீரிடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் அசோக்குமார் பேசுகையில், கோடை உழவு செய்வதன் அவசியம் குறித்தும், விதை நேர்த்தி செய்வதால், விதை மூலம் பரவும் பூஞ்சாண நோயினை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என விரிவாக எடுத்துக்கூறினார். மேலும் அவர் பேசுகையில் மக்காச்சோளம் வயலில் நிலம் தயாரிப்பு முறைகள், விதைக்கும் பருவம், விதைத்தேர்வு, விதை அளவு, பயிர் இடைவெளி, ஊடுபயிர், வரப்புபயிரின் முக்கியத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு குறித்த தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயி களுக்கு எடுத்துக்கூறினார். நிகழ்ச்சியின் முன்னதாக வட்டார தொழில் நுட்பமேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் உயிர் உரங்களின் பயன்கள், இனக்கவர்ச்சி பொறி மற்றும் அங்கக பண்ணையம் குறித்தும் எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் உசா, சுத்தமல்லி மற்றும் புளியங்குழி கிராம விவசாய பெருமக்கள் கலந்துக்கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகளை பகுப்பாய்வு செய்த பின் விற்பனை செய்க!

விதை விற்பனையாளர்கள் பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகளை பகுப்பாய்வு செய்த பின் விற்பனை செய்யுமாறு கடலூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.விஜயா விடுத்துள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

நெல் பயிர் செய்வதற் குமுன் பசுந்தாள் பயிர்களான சணப்பை மற்றும் தக்கைப்பூண்டு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினை விதைத்துமடக்கி உழுது பின் நெல் நடவு செய்வது பாரம்பரிய முறைப்படி கடைபிடிக்கும் இயற்கை உரமிடும் முறையாகும்.

**பசுந்தாள் பயிர்களின் தரம்**

பசுந்தாள் பயிர்களின் விதைகள் பொதுவாக விவசாயிகளிட மிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்பட்டு விதை விற்பனையாளர்கள் மூலம் மீண்டும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இத்தகைய பயிர்களின் விதைகள் சான்றளிப்புக்கு உட்படாமல் நேரடியாக கொள்முதல் செய்யப்படுவதால், பகுப்பாய்வு செய்த பின் விற்பனை செய்வது மிக அவசியமாகும். நடப்பு பருவத்திற்கு விற்பனை செய்யப்படும் பசுந்தாள் பயிர்களின் விதைகள் குறைந்தபட்சம் 98% சுத்தத் தன்மையும் 80% மற்றும் 75% முளைப்புத்திறன் முறையே சணப்பு மற்றும் தக்கைபூண்டு பெற்றிருக்க வேண்டும். எனவே, விதை விற்பனையாளர்கள் ஒவ்வொரு பசுந்தாள் பயிர் விதைக் குவியலும் பகுப்பாய்வு செய்து குறைந்தபட்ச முளைப்புத்திறன் மற்றும் சுத்தத்தன்மையில் தேறியுள்ளதா என்பதை தெரிந்து பின்னர் விற்பனை செய்யுங்கள்.

**பகுப்பாய்வு செய்வது எப்படி?**

முளைப்புத்திறன் பகுப்பாய்வு செய்ய, விதை விற்பனை யாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடமுள்ள பசுந்தாள் பயிர் விதைக்குவியலில் இருந்து சணப்பை விதையாக இருப்பின் 100

கிராம், தக்கைப்பூண்டு விதையாக இருப்பின் 50 கிராம் எடுத்து விண்ணப்பக் கடிதத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் பரிசோதனை கட்டணம் செலுத்தி விதைப்பரிசோதனை நிலையம், 97,பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலை செட்டிசாவடி, கடலூர் - 607 006 என்ற முகவரியில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைபகுப்பாய்வு செய்து முடிவினை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அந்தச் செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# நிலக்கடலை சாகுபடியில் விதை நேர்த்தி



நிலக்கடலை விதைகளை உயிர் உரம் மற்றும் பூஞ்சான உயிர்கொல்லி கொண்டு விதை நேர்த்தி செய்வதால் விதையின் மூலம் பரவும் நோய் மற்றும் பூஞ்சாணங்கள் அழிக்கப்படுகிறது. மேலும், உயிர் உர விதை நேர்த்தியால் பயிருக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கப்பெற்று அதிக மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்கத் தரமான சான்று பெற்ற 80 கிலோ நிலக்கடலை விதையினை கீழ்க்கண்ட முறையில் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

### விதை நேர்த்தி முறை

### 1. பூஞ்சான உயிர்க்கொல்லி விதை நேர்த்தி முறை

ஒரு கிலோ நிலக்கடலை விதைப் பருப்புடன் 4 கிராம் டிரைக்கோ டெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனஸ் பூஞ்சான உயிர்க்கொல்லியை 100 மில்லி ஆறிய அரிசிக் கஞ்சியில் கலந்து அதனை விதைப்பருப்பில் கலந்து பின்பு நிழலில் விதைகளை உலர்த்தி காய்ந்தபின் விதைக்க வேண்டும். நிலக்கடலையில் விதைநேர்த்தி செய்யும் பொழுது அதன் மேற்புறத்தோல் உரிந்து போகாத வண்ணம் கவனமாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். இல்லையேல் முளைப்புத் திறன் பாதிக்கப்படும்.

### 2. உயிர் உர விதை நேர்த்தி

உயிர் உர விதை நேர்த்திக்கு, விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான 240 கிராம் ரைசோபியம் உயிர் உரத்தினை கலந்து பின் விதைக்க வேண்டும். மேலும், திரவ உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்யும் பொழுது ஒரு ஏக்கருக்குத் தேவையான நிலக்கடலை விதைப்பருப்புடன் 50 மில்லி கலந்து விதைப்பு செய்யலாம். முதலில் பூஞ்சான உயிர்க் கொல்லி விதை நேர்த்தி செய்த பின்பு உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**பயன்கள்**

1. பூஞ்சான உயிர்க்கொல்லி கொண்டு விதை நேர்த்தி செய்வதால் நிலக்கடலையில் இலைப்புள்ளி, வேரழுகல் போன்ற நோய்களுக்கான எதிர்ப்பு சக்தி பெறப்பட்டு விதையின் நலம் பேணப்படுகிறது.

2. உயிர் உர விதை நேர்த்தி மூலம் ரைசோபியம் பாக்டீரியாவானது பயிரின் வேர் முடிச்சில் இருந்து பயிருக்குத் தேவையான தழைச் சத்தினை வளிமண்டலத்திலிருந்து கிரகித்துக் கொடுக்கிறது. இதனால் பயிர் செழித்து வளர்ந்து திரட்சியான மணிகள் பெறப்படுகின்றன. மேலும் தழைச் சத்து உரத்திற்கான செலவு குறைக்கப்பட்டு மண்ணின் நலம் பேணப்பட்டு அதிக மகசூலும் கிடைக்கப்பெறுகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலை சாகுபடி செய்திடும் விவசாயிகள் விதைப்பதற்கு முன்னரே விதைப் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணயக் காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிக பட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும், குறைந்தபட்சமாக 98 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம்.

ஆகவே விருதுநகர் மாவட்ட நிலக்கடலை விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு விதை பரிசோதனை செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விருதுநகர் மாவட்ட விதை பரிசோதனை நிலையமானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

விதைப் பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80-ஐ பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி, பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளுடன், நிலக்கடலை விதை 500 கிராம் அளவிற்கு விதை மாதிரி எடுத்து அனுப்பி, விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம் என மதுரை விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, விருதுநகர் வேளாண்மை அலுவலர்கள் ஐ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# ஆத்மா திட்டத்தில் உழவர் பெருவிழா

இராணிப்பேட்டை, ஜூன் 17

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம், வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தில் கரியா குடல் கிராமத்தில் உழவர் பெருவிழா வேளாண்மை உதவி இயக்குனர் அருணாகுமாரி தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில் விவசாயிகள் இயற்கை இடுபொருட்கள் பயன்படுத்தி உரத் தேவையை குறைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் 2026-27 வருடத்திற்கான குறுவை சாகுபடி தொகுப்பு குறித்து கூறினார்.




பயிற்சியில் கலந்து கொண்ட விரிஞ்சிபுரம் வேளாண்மை நிலைய பேராசிரியர் முனைவர் பரமசிவம், சமச்சீர் உரப் பயன்பாடு, அங்கக வேளாண்மை, பயிர்களில் பூச்சி, நோய் மேலாண்மை மேலாண்மை குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் திவ்யஸ்ரீ பயிர் சுழற்சி முறை, பசுந்தாள் உரம் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை காக்க நிலப்போர்வை முறை குறித்து பேசினார். தோட்டக்கலை துணை அலுவலர் ஜெயச்சந்திரன், தோட்டக்கலை பயிர்களுக்கான மானியங்கள் மற்றும் காய்கறிப் பயிர்களில் இயற்கை இடுபொருட்கள் பயன்படுத்துவது குறித்து பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் விவசாய அடையாள எண் மற்றும் சொட்டுநீர் பாசன முறைகள் குறித்து பேசினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் ரியாஸ், கஸ்தூரி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் மற்றும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 8537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பசுந்தாள் உர பயிர் விதைகளை விதைப்பரிசோதனை செய்து விதைக்க விவசாயிகளுக்கு வேண்டுகோள்!

புதுக்கோட்டை, ஜுன் 17

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நெல் பயிரிடுவதற்கு முன் பசுந்தாள் உரப்பயிர்களை விதைத்து 40-45 நாட்களில் மண்ணில் மடக்கி உழுவதால் மண்ணின் தழைச்சத்து அதிகரிக்கிறது. மண் வளமாகவும் நலமாகவும் இருக்க பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பு, தக்கைப்பூண்டு, கொளிஞ்சி போன்றவற்றை பயிரிட்டு பூ பூப்பதற்கு முன் அதே நிலத்தில் மடக்கி உழுவதால் இவை காற்றில் உள்ள நைட்ரஜனை கிரகித்துக் கொண்டு வேர் மற்றும் தண்டு முடிச்சு வாயிலாக நிலத்தில் தழைச்சத்தை சேமிக்கின்றது. மண்ணில் காற்றோட்டம் ஏற்பட்டு நீர் பிடிப்பு தன்மையை அதிகரிக்க செய்கிறது. மண்ணில் உள்ள மண் புழுக்கள் மற்றும் நன்மை செய்யும் பாக்டீயாக்களுக்கு உணவாகி அவற்றின் பெருக்கத்தை ஊக்குவிக்கிறது. மண் அரிப்பை தடுத்து களை களை கட்டுப்படுத்தி பயிர் மகசூலை அதிகரிக்க செய்கிறது.

பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பு குறைந்தபட்ச முளைப்புத் திறன் 80 சதவிகிதமும் தக்கைப்பூண்டு, கொளிஞ்சி பயிருக்கு 75 சதவிகிதமும் முளைப்புத்திறன் இருக்க வேண்டும். தரமான விதைகளை பயன்படுத்தும் போது விதையளவு குறைவதுடன் அதிகமான பசுந்தாள் உரம் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பசுந்தாள் உர மான சணப்பு, தக்கைப்பூண்டு, கொளிஞ்சி விதை மாதிரிகளை முறையே 100 கிராம் அளவில் எடுத்து புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோ கர்ணம் 622 002, என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் துணிப்பையில் இட்டு பயிர் இரகம் தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு மாதிரி களைக் கொடுத்து, மாதிரிக்கு ரூ.80/- மட்டும் செலுத்தி விதை களை பரிசோதனை செய்து கொள்ளலாம். பரிசோதனை முடிவு களை உங்கள் இருப்பிட முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என புதுக்கோட்டை விதைபரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி, வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# வெண்நுனி இலை நூற்புழுவில் [Rice Case Worm] இருந்து நெற்பயிர்களை பாதுகாக்கும் வழிமுறைகள்

வெண்நுனி இலை நூற்புழுவில் இருந்து நெற்பயிர்களை பாதுகாப்பது குறித்து திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநரின் விவசாயிகளுக்கான வழிமுறைகள்.

## தாக்குதலின் அறிகுறிகள்

நெல் விதைகளில் உறக்க நிலையில் இருக்கும் இந்நூற்புழுக்கள் விதைத்த பின்பு முளைவிட்டு வளரும் பயிருடன் சேர்ந்து நகர்ந்து கொண்டே இலை நுனியினை அடைகின்றன. பாதிக்கப்பட்ட பயிர்களின் இலைநுனிகள் மஞ்சள் நிறமடைந்து பின்பு காய்ந்து சாட்டை போன்று சுருண்டு காணப்படும். வளர்ந்த பயிர்களில் நூற்புழு பாதிப்பினால் கண்ணாடி இலை/பூட்டை இலை என்று சொல்லக்கூடிய இலை சுருண்டு விடுவதால் அதிலிருந்து வெளிப்பட வேண்டிய கதிர்கள் சரிவர விடுபடாமல் இருக்கும். பயிரின் பூக்கும் பருவத்தில், உற்பத்தி பாகங்கள் பாதிப்படைவதால் நெல்மணிகள் சரியாக உருவாகாது. ஆகையால் நெற்கதிரில் பதர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். பொதுவாக பாதிக்கப்பட்ட பயிரின் வீரியமும், வளர்ச்சியும், விளைச்சலும் குறைவாக இருக்கும்.

## கட்டுப்பாடு

இந்நூற்புழுக்கள் பெரும்பான்மையாக விதை மூலம் பரவுவதால் விதைகளை ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் இரண்டு நாட்களுக்கு நல்ல சூரிய வெய்யிலில் உலர்த்தி விதைகளில் உள்ள நூற்புழுக்களை அழிப்பது நல்ல பலனைத் தரும். நெல் அறுவடைக்கு பின்னர் வயலில் உள்ள தாள்களை அகற்றி எரிப்பதன் மூலமும் இந்நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம். நெல் வேர் முடிச்சு நூற்புழு, நெல் வெண்நுனி இலை நூற்புழு இரண்டையும் குறைந்த செலவில் பயிர் வளர்ச்சி ஊக்கி பாக்டீரி யாவான சூடோமோனாஸ் புளுரசன்ஸ் உபயோகித்து உயிரியல் முறையில் கட்டுப்படுத்தலாம். அதன்படி நெல் விதைகளை கிலோ ஒன்றுக்கு 10 கிராம் சூடோமோனாஸ் உடன் விதை நேர்த்தி செய்து நாற்றாங்காலில் விதைத்த பின்பு அதே பாக்டீரியத்தை நடவு வயலில் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு கிலோ என்ற அளவில் தேவையான நீருடன் கலந்து நாற்று நட்ட 45,55,65-ம் நாட்களில் தெளிப்பதன் மூலம் இந்நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் என திருச்சிராப் பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்தார்.

# மானாவாரி சார்ந்த நிலக்கடலை சாகுபடி முறைகள் மற்றும் இயந்திரமாக்கல் குறித்து பயிற்சி

சேலம், ஜூன் 17

சேலம் மாவட்டம், ஜகுந்தம்கொத்தப்பள்ளி கிராமத்தில் மானாவாரி சார்ந்த நிலக்கடலை சாகுபடி முறைகள் மற்றும் இயந்திரமாக்கல் பயிற்சி நடைபெற்றது.







வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார் தலைமையில் நிலக்கடலை சாகுபடி குறித்து நிலம் தயார் செய்தல் விதை நேர்த்தி மற்றும் பயிர் பாதுகாப்பு குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் பவித்ரா உயிர் உரங்கள் பயன்பாடு மற்றும் நுண்ணுட்டகலவை பயன்பாடுகள் குறித்து தொழில் நுட்பரையாற்றினார். வேளாண்மை அறிவியல் மையம் செந்தில்குமார் மற்றும் இஸ்மாயில் நிலக்கடலை சாகுபடி குறித்து நிலம் தயார் செய்தல் சட்டிக் கலப்பையைப் பயன்படுத்தி உழுதபின் 3 அல்லது 4 முறை இரும்புக்கலப்பை அல்லது நாட்டுக் கலப்பையைக் கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழ வேண்டும். விதை நேர்த்தி விதைப்பதற்கு முன் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணுட்டை கலவைகளை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வது அவசியம். களைகள் முளைத்த 20 முதல் 25 நாட்களில் களைகளை அகற்ற வேண்டும்.

இயற்கை முறையில் பஞ்சகாவியா மற்றும் பூச்சி விரட்டி பயன்படுத்தலாம். ஜிப்சம் இடுவதால் விதைத்த 40-45 நாட்களில் பூக்கள் பூக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 25 கிலோ ஜிப்சத்தை இட்டு மண்ணுடன் சேர்த்து அணைக்க வேண்டும். நிலக்கடலையில் பூ உதிர்வதை தடுத்து காய் பிடிப்பதை அதிகரிக்க கோவை வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரைத்த 'நிலக்கடலை ரிச்' போன்ற ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளாக பயன்படுத்தலாம்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் திருமால் மற்றும் தனசேகர் பேசுகையில் விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பங்களையும் வேளாண்மை துறையில் மானிய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தனர். பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு, உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், கிரிஜா ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

# சிறுதானிய மதிப்புகூட்டுதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, ஜூன் 17

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் சிறுதானிய மதிப்புகூட்டுதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 17.06.26 அன்று சின்னாரெட்டிபட்டி கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா, மத்திய அரசின் திட்டமான கேச் பச்சாவோ அபியான் விளை நிலம் காப்போம் இயக்கம் திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண் வளத்தை மேம்படுத்துதல் திரவ உயிர் உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தினார். விவசாயிகளின் தணித்துவ அடையாள எண் பதிவு செய்தல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் சு.சரவணகுமார், உயிர் உரங்கள் மற்றும் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் குறித்த விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேற்கண்ட பயிற்சிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு தென் மாவட்ட இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் அன்னவயல் ச.காளிமுத்து, சிறுதானியத்தில் உள்ள சத்துகள் முக்கியத்துவம் மற்றும் அதில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயார் செய்வது சந்தைபடுத்துவது பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் சு.சங்கர் கணேஷ் விவசாயி களுக்கு தனித்துவ அடையாள எண் பதிவு செய்வது ஒழுங்கு முறை விற்பனை கூடம் செயல்பாடுகள் தேசிய மின்னனு வேளாண் சந்தை செயல்பாடுகள் நுண்ணுட்டகலவை பயன் பாடு பற்றி எடுத்துக் கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ம.ஹேமலதா நன்றியுரை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பா.மாரிமுத்து, க.துர்கா இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# குறுவைப் பருவத்தில் நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு மானியம்

திருச்சி, ஜூன் 17

குறுவைச் சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நெல் இயந்திர நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பிற்கான ஊக்கத்தொகை, உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்ட உரக்கலவை, விதை விநியோகத்திற்கான மானியம் ஆகியவை வழங்கப்படவுள்ளன. நடப்பு நிதியாண்டில் 31.08.26-ம் தேதிக்குள் குறுவைப் பருவத்தில் நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள், இயந்திர நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பினைப் பின்பற்றிட ஊக்குவிக்கும் விதமாக, ஏக்கர் ஒன்றிற்குப் பின்னேற்பு மானியமாக ரூபாய் 4000/- (நான்காயிரம்) வழங்கப்பட உள்ளது. இயந்திர நடவு அல்லது நேரடி நெல் விதைப்பு முறையைப் பின்பற்றும் பட்சத்தில், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு ஏக்கர் பரப்பளவிற்குப் பின்னேற்பு மானியம் வழங்கப்பட அரசாணை பெறப்பட்டுள்ளது. மேலும் மானிய விலையில் நெல் நுண்ணூட்டம், உயிர் உரம் மற்றும் சான்று பெற்ற விதைகள் விநியோகம் செய்திட இலக்கு பெறப்பட்டுள்ளது. குறுவைச் சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் 'உழவன்' செயலி மூலம் பதிவு செய்திட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு வேளாண்மை அலுவலர் : 88255 56804, துணை வேளாண்மை அலுவலர் : 70940 94329 மற்றும் அந்தந்தப் பகுதிக்கு உட்பட்ட வேளாண்மை உதவி அலுவலர்களையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, இத்திட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற வேண்டும் என்று சி.சத்தியப்பிரியா, வேளாண்மை உதவி இயக்குநர், லால்குடி கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அசோலா வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜூன் 17

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில், சேடபட்டி கிராமத்தில் வேளாண்மைத் துறை – வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் (ATMA-2026-27) அசோலா வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 17.06.26 அன்று நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் கா.மணிமேகலை கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

டாக்டர் சுருளிராஜன், கால்நடை மருத்துவர், பேசுகையில் அசோலா வளர்ப்பு முறைகள் பற்றியும், ஆடு, மாடு, கோழி களுக்கு தீவனமாக கொடுக்கும் அளவுகள் பற்றியும் வளர்ப்பு முறைகள் பற்றியும் மானிய திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். கேத் பச்சோ அபியான் திட்டத்தின் கீழ் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா கலந்து கொண்டு கூறுகையில் பஞ்சகாவ்யம், மீன் கரைசல், இஞ்சி பூண்டு கரைசல், மோர் கரைசல் மற்றும் திரவ அசோஸ் பைரில்லம், ரைசோபியம் ஆகிய இயற்கை உரங்களை பயன்படுத்தி பூச்சி, நோய் தாக்குதலின்றி இயற்கை முறையில் அதிக மகசூல் பெற்றிடலாம். உதவி வேளாண்மை அலுவலர் குமார், பேசுகையில் மண் பரிசோதனை செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மண் எடுக்கும் வழிமுறைகள் பற்றியும் கூறினார். விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள அட்டை பதிவு செய்வது பற்றி எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்யா ஏற்பாடுகளை மிக சிறப்பாக செய்திருந்தார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா நன்றி கூறினார்.

# புதிய சன்ன இரக நெல் இரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஜூன் 17

ஈரோடு மாவட்டம். மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் புஞ்சைகாள மங்கலம் கிராமத்தில் உள் மாவட்ட அளவில் புதிய சன்ன இரக நெல் இரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி பசுந்தாள் பயிர்களின் மூலம் மண்வளத்தை மேம்படுத்துதல் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும்.

மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் இதன் மூலம் மண்வளம் காக்கப்படும் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். பச்சியப்பன், தோட்டக்கலைத்துறை வல்லுநர், வேளாண்மை அறிவியல் நிலையம், கோபி, சன்ன இரக நெல் இரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல் குறித்து பயிற்சி அளித்தார். நந்தகுமார், துணை வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மை உழவர் நலத்துறை மானியத் திட்டங்கள் குறித்து விளக்கினார். பாலகிருஷ்ணன், உதவி விதை அலுவலர், மொடக்குறிச்சி, விதைப்பண்ணை அமைத்தல் அங்கக சான்றிதழ் பெறும் முறைகள் குறித்து விளக்கினார். பாரத், உதவி வேளாண்மை அலுவலர், மொடக் குறிச்சி நுண்ணீர் பாசனம் குறித்து கூறினார். அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.

# அட்மா திட்டத்தின் கீழ் மதிப்பு கூட்டுதல் குறித்த சுற்றுலா




அரியலூர், ஜுன் 17

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் சிறு தானியங்களில் அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்த வெளிமாவட்ட விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா பயிற்சிக்கு புதுக்கோட்டை அங்கக விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனிக்கு தா.பழூர் வட்டார விவசாயிகள் 40 பேர் அழைத்து செல்லப்பட்டனர்.

இப்பயிற்சியில் அங்கக விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குநர் விஜயா, கலந்துக் கொண்டு பேசுகையில் உற்பத்தியாளர் கம்பெனியின் செயல்பாடுகள், உறுப்பினர்களின் வயல்களிலிருந்து தரமான உற்பத்தி பொருட்களை மட்டுமே எங்கள் நிறுவனம் கொள்முதல் செய்து, அவற்றினை மதிப்பு கூட்டி விற்பனை செய்கிறோம் எனக் கூறினார்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாய்கள் அனைத்து உறுப்பினர் களுக்கும் கிடைப்பதன் மூலம் அவர்கள் தங்கள் வருவாயினை இரட்டிப்பாக்கி தங்கள் வாழ்வியல் முறைகளில் மேம்பாடு அடைய வழிவகை செய்கிறோம் என நிறுவனத்தின செயல் பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார்.

மேலும் உற்பத்தி பொருட்களை எவ்வாறு மதிப்பு கூட்டி விற்பனை செய்கின்றனர் என்பதனை விவசாயிகள் அனைவரும் நேரிடையாக கண்டறிந்தனர். இந்நிகழ்ச்சியில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# மழைக்குப் பிறகு மனதை கவரும் மணம் – “ஜியோஸ்மின்” என்ற இயற்கையின் அதிசயம்

முதல் மழை பெய்தவுடன் மண்ணிலிருந்து எழும் அந்த இனிய மணத்தை யாராலும் மறக்க முடியாது. விவசாயிகளுக்கும், இயற்கை நேசிகளுக்கும், குழந்தைகளுக்கும் கூட அந்த மணம் ஒரு புத்துணர்வை தருகிறது. “மண் வாசனை” என்று நாம் அழைக்கும் இந்த மணத்திற்கு பின்னால் ஒரு அறிவியல் ரகசியம் இருக்கிறது. அந்த ரகசியத்தின் பெயர் தான் ஜியோஸ்மின்.

## ஜியோஸ்மின் என்றால் என்ன?

“ஜியோ” (Geo) என்றால் மண், “ஸ்மின்” (Smin) என்றால் மணம். அதாவது “மண்ணின் மணம்” என்பதே ஜியோஸ்மின் என்ற சொல்லின் பொருள். இது ஒரு இயற்கை வேதிப்பொருள். குறிப்பாக மண்ணில் வாழும் Actinomycetes எனப்படும் நுண்ணுயிரிகள் இதை உருவாக்குகின்றன. வறண்ட நிலத்தில் மழைத்துளிகள் விழும் போது, இந்த ஜியோஸ்மின் காற்றில் கலக்கிறது. அதனால் தான் மழைக்குப் பிறகு நாம் அந்த இனிய மணத்தை உணர்கிறோம்.

## மண்ணின் உயிர்கள் உருவாக்கும் மணம்

மண்ணில் எண்ணற்ற நுண்ணுயிரிகள் வாழ்கின்றன. அவற்றில் முக்கியமானவை Streptomyces. இவை மண்ணில் உள்ள உயிர்ச் சத்துக்களை சிதைத்து, தாவர வளர்ச்சிக்கு உதவுகின்றன. இதன் போது ஜியோஸ்மின் உற்பத்தியாகிறது. மழைத்துளிகள் மண்ணை தாக்கும் போது சிறிய காற்றுக் குமிழ்கள் உருவாகின்றன.



அவை வெடித்து ஜியோஸ்மினை காற்றில் பரப்புகின்றன. அதுவே நம் மூக்கிற்கு வரும் “மண்வாசனை”.

**விவசாயத்துடன் உள்ள தொடர்பு**

ஜியோஸ்மின் மணம் வெறும் இனிய அனுபவம் மட்டுமல்ல. அது மண்ணின் உயிர்ச்செயல்பாடு நன்றாக உள்ளது என்பதற்கான ஒரு குறியீடும் ஆகும்.

**ஜியோஸ்மின் அதிகமாக இருக்கும் மண்**

- உயிர்ச்சத்து நிறைந்ததாக இருக்கும்
- நுண்ணுயிர் செயல்பாடு சிறப்பாக இருக்கும்
- மண் ஆரோக்கியம் மேம்பட்டிருக்கும்
- பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல் உருவாகும்

இதனால், நல்ல மண்ஆரோக்கியம் கொண்ட வயல்களில் மழைக்குப் பிறகு மணம் அதிகமாக இருக்கும்.

“பெட்ரிகோர்” என்ற சொல்லும் இதுவே!

மழைக்குப் பிறகு வரும் மணத்திற்கு அறிவியல் உலகில் “Petrichor” என்ற பெயரும் உண்டு. இதில் முக்கிய பங்காற்றுவது ஜியோஸ்மின் தான். குறிப்பாக நீண்ட வறட்சிக்குப் பிறகு பெய்யும் முதல் மழையில் இந்த மணம் மிகவும் அதிகமாக உணரப்படும்.

**மனிதர்களின் உணர்திறன்**

ஆச்சரியமாக, மனிதர்கள் ஜியோஸ்மினை மிகவும் குறைந்த அளவில் கூட உணர முடியும். சில துளிகள் அளவிலான ஜியோஸ்மினே பெரிய பகுதியை மணமாக மாற்றி விடும்.

மண்ணை பாதுகாப்போம்

மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் தான் இந்த இயற்கை மணத்தின் காரணம். ஆகவே

- அதிக ரசாயனப் பயன்பாட்டை குறைக்க வேண்டும்
- இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்
- மண் உயிர்ச்சத்தை பாதுகாக்க வேண்டும்
- பசுமை உரம் மற்றும் கம்போஸ்ட் பயன்படுத்த வேண்டும்

இவை மண் ஆரோக்கியத்தையும், நுண்ணுயிர் வளத்தையும் மேம்படுத்தும்.

**முடிவுரை :** மழைக்குப் பிறகு நம்மை மகிழ்விக்கும் அந்த மண் மணம் ஒரு சாதாரண விசயம் அல்ல. அது மண்ணின் உயிரோட்டத்தையும், இயற்கையின் நுண்ணிய செயல்பாடு களையும் வெளிப்படுத்தும் அற்புதமான அறிகுறி. ”ஜியோஸ் மின்“ என்பது மண்ணின் உயிர் மூச்சு போல இயற்கை நமக்கு அளிக்கும் ஒரு இனிய பரிசாகும்.

தகவல் : ***குளோரி.கே.எஸ், சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.***

